# மீன்வள உதவியாளர் காலிப் பணியிடம்: விண்ணப்பங்கள் வரவேற்பு

**திருநெல்வேலி, செப்.10:** திருநெல்வேலி மாவட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் காலியாகவுள்ள 8 மீன்வள உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப் பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இது தொடர்பாக மாவட்ட செய்தி, மக் கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை யில் திருநெல்வேலி மாவட்டத்தில் காலி யாகவுள்ள 8 மீன்வள உதவியாளர் பணியி டங்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெ றவுள்ளது.

மீன்வள உதவியாளர் பதவிகளுக்கு தமி ழில் நன்றாக எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும். மேலும் நீச்சல், மீன்பிடிப்பு, வலை பின்னுதல், அறுந்த வலைகளை பழு துபார்க்க தெரிந்திருக்க வேண்டும். மீன்வ ளத்துறையினரால் நடத்தப்படும் ஏதே னும் ஒரு மீனவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் உள்ள வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஊதியம் ரூ.15,900 முதல் 50,400 வரை, பொதுப் பிரிவினர் 18 முதல் 30 வயதுடை யவராக இருத்தல் வேண்டும். பெண்கள், ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை யில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 18 முதல் 32 வயதுடை யவராகவும், பிற்படுத்தப்பட்டோர் வகுப் பினர் (முஸ்லிம்கள் தவிர) 18 முதல் 32 வய துடையவராகவும் இருத்தல் வேண்டும். ஆதிதிராவிடர் பிரிவினர் 18 முதல் 35 வய துடையவராக இருத்தல் வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், மணிமுத்தாறு என்ற முகவரி யில் விண்ணப்பங்களை நேரில் பெற்று உரிய நகல் ஆவணங்களுடன் வரும் 30-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக் குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நேர்முகத்தேர்விற்கான இடம் மற்றும் நாள் குறித்து விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும். இது தொடர் பான மேலும் விவரங்களுக்கு 04634-290807 என்ற தொலைபேசி எண் ணில் தொடர்பு கொள்ளலாம்.